Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

59

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 05 | 19-05-2003 | திங்கட்கிழமை | ஓசை 90

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)

## - தென்னிலங்கையில் கடும் மழை காரணமாக -

# பெரும் வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள்

# நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் உயிரிழப்பு!

## 300 கிராமங்களை நீர் சூழ்ந்தது
## 2 1/2 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு!

(கொழும்பு)

**தென்னிலங்கையில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழையினால் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கு, மண் சரிவுகள் காரணமாக 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 300 கிராமங்கள் நீரினால் சூழப்பட்டுள்ளன. இதில் 100 கிராமங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவில் நிலைமை மோசமடைந்துள் ளது. வெள்ளப்பெருக்குக் காரணமாக இரண்டரை இலட்சம் மக்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.**

இலங்கையின் தென்பகுதியில் சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழைகாரணமாக இரத்தினபுரி, மாத்தளை, களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டபெரு வெள்ளத்தினால் சுமார் 100பேர் உயிரிழந்துள்ளதாக சிறிலங்காவின் அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. அத்துடன் 54 ஆயிரம் குடும்பங் களைச் சேர்ந்த இரண்டரை இலட்சம் பேர் வெள்ளம் காரணமாக வீடுகளை இழந்துள்ளனர். மேலும் 100 பேர் காணாமல் போயுள்ளதாகத் தெரியவருகின்றது. இது 1947ம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட மிகப் பெரிய

(08ஆம் பக்கம் பார்க்க)

## அரச உயர் மட்டப்பிரதிநிதிகளுடன் கெல்ஹேசன் நேற்றுச் சந்திப்பு



(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன் நேற்று சிறிலங்கா அரசாங்க உயர் மட்டத்தினருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அரசாங்கத் தரப்பில் அமைச்சர்களான ஜீ.எல் பீரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் பேணாட்குணதிலக ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் விதார் கெல்ஹேசன் நேற்றிரவு சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க விருந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு உள்ள முட்டுக்கட்டைகளை நீக்குவதற்கான அரசாங்கத்தின் ஆலோசனைகளை நேற்று முன்தினம் புலிகளிடம் சமர்ப்பித்த கெல்ஹேசன் அவற்றுக்கான புலிகளின் பதிலைப் பெற இன்று மீண்டும் கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீட்புப் பணிக்கு இந்தியாவிடம் சிறிலங்கா உதவி கோருகிறது!

இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பிரச்சினையைத் சமாளிப்பதற்கு நிபுணர்களையும், விரைவுஇயந்திரப் படகுகளையும் வழங்குமாறு இலங்கை அயல் நாடான இந்தியாவிடம் உதவி கோரியுள்ளது.

விரைந்தோடுகின்ற கடும் வெள்ளத்தின் மத்தியில் படகின் மூலம் சென்றடைய முடியாத இடங்களிலிருக்கின்ற 100க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சிறிலங்கா விமானப்படையினர் ஹெலிகொப்டர்களின் ஊடாக தண்ணீர்ப் போத்தல்களையும், உணவுப் பொதிகளையும் போட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங். கனடாத்தூதுவர் நாளை திருகோணமலை விஜயம்

(திருமலை)

இலங்கைக்கான கனடாத் தூதுவர் திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

நாளை இவர் அங்கு விஜயம் செய்யவுள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் முக்கிய அதிகாரிகளைச் சந்திக்க இருக்கும் இவர், அங்கு இடம்பெறும் விசேட நிகழ்வு ஒன்றிலும் கலந்து கொள்ளவுள்ளார். (25)

### - முல்லைத்தீவு முகாம் கைப்பற்றப்பட்ட போது -

## படையினருக்கு ஏற்பட்ட இழப்புப் பற்றி விபரங்கோருகிறார் பொ.ஐ.மு.பா.உ

1996இல் முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டபோது படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, அங்கவீனமுற்றோர், காணாமல் போனோர் தொகை என்பன குறித்த விபரங்களைப் பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் கோரியுள்ளார். அத்துடன் படையினர் பறிகொடுத்த ஆயுதங்களின் விபரங்களையும் அவர் கேட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் மே 20ம்திகதி வாய்மூலமான பதிலாக இவற்றை

(08ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் படையினர் கெடுபிடி; வடமராட்சி கிழக்கில் சேவை நிறுத்தப்படும்!

### - பருத்தித்துறை வைத்திய அதிகாரி பணிமனை தெரிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் மருத்துவ சேவையினை, அடுத்த மாதம் முதல் நிறுத்தப்போவதாக பருத்தித்துறை வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறையில் இருந்து முகமாலையூடாக இப்பணியினை மேற்கொள்ள வரும் மருத்துவக் குழுவினர் மீது முகமாலையில் படையினர் மேற்கொள்ளும் கெடுபிடி நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையடுத்தே இச்சேவையினை நிறுத்தப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இச்சேவையினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வேண்டிய வாகன வசதிகள் சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்படுவதில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

## மண்டபம் அகதிமுகாமிலிருந்து 36பேர் மன்னார் திரும்பினர்

(மன்னார்)

தமிழகத்தில்அகதிமுகாமில் தங்கி இருந்த முற்பத்தாறுஈழத்தமிழ் அகதிகள் மன்னாருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

மண்டபம் அகதிமுகாமில் தங்கியிருந்த இவர்கள் படகுகள் மூலம் மன்னாருக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபின் அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

(மி)

## வடமராட்சி மக்களை அச்சுறுத்தும் உந்துருளி ரோந்துப்படைப்பிரிவு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் இராணுவத்தினரின் உந்துருளி ரோந்துப் பிரிவினர் கடந்த இரண்டு தினங்களாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்பின் இவர்களது ரோந்து நடவடிக்கைகள் இதுவரை காலமும் நிறுத்தப்பட்டிருந்தன.

இவர்கள் நேற்றும் நேற்று முன்தினமும் வடமராட்சிப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் பொதுமக்களை வீதிகளில் மறித்து விசாரணை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப்புலிகள் ஒழுங்கு செய்திருந்த நிகழ்வு ஒன்று இப்பகுதியில் நேற்று இடம்பெற்றபோது அப்பகுதிக்குப் பல தடவை சென்ற இந்த ரோந்துப் பிரிவினர் அங்கும் பலரை விசாரணை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர். (27)

## அமெ. உட்பட 3 நாடுகள் பங்கேற்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒத்திகை

### சிறிலங்காவுக்கும் அழைப்பு

அமெரிக்கா உட்பட மூன்று நாடுகளது படையணிகள் கலந்து கொள்ளும் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒத்திகை தாய்லாந்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இந்த மிகப்பெரிய ஒத்திகை நடவடிக்கை அடுத்த இரண்டு வாரங்களுக்கு நடைபெறவுள்ளது.

இதில் பார்வையாளராகக் கலந்து கொள்வதற்கு சிறிலங்காவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, தாய்லாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் மாநாட்டைப் பிற்போட தமிழ்க் கூட்டமைப்பு கோரும்

விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை சிறிலங்கா அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீவிரமாக முன்னெடுக்கவுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சிறிலங்காப் பிரதமரைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை டோக்கியோ மாநாட்டுக்கு முன்னர் நிறைவேற்றுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பிரதமரிடம் வலியுறுத்தவுள்ளனர்.

இதனை அடுத்து இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களையும் தனித்தனியாகச் சந்தித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## - கிளி. கட்டம் - 01 வைத்தியசாலையில் -

# ஒன்பது மணிநேரம் காத்திருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட கட்டம் 01 வைத்தியசாலையில் வைத்தியர்கள் மணிவரை வைத்திய பரிசோதனை பெறுவதற்காகக் காத்து நிற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டு நேற்று இரு வைத்தியர்களே மேற்படி சிகிச்சையினை மேற் கொண்டமையின் காரணமாக



படம் : சோதி

பற்றாக்குறை காரணமாக அங்கு சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மாதத்தில் ஒரு தடவை நடைபெற்றுவரும் நீரிழிவு, குருதிய முத்தம், காச நோய் போன்றவற்றுக்கான கிளினிக் நாட்களில் அந்தந்த நோயாளர்கள் பெருமளவில் மேற்படி வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் வைத்திய அதிகாரிகள் பற்றாக்குறை காரணமாக பல மணித்தியாலங்கள் அதாவது காலை முதல் பி.ப. 3.30 ள்ளது.

அது தவிர இவ்வாறு சிகிச்சை பெறக் காத்து நிற்கும் நோயாளர்களுக்குப் போதியப் இருக்கை வசதிகள் இன்மையினால் மர நிழல்களுக்குக் கீழ் தங்கி நின்று சிகிச்சை பெற வேண்டிய நிலைக்கு இவர்கள் ஆளாகியுள்ளனர்.

நேற்று மேற்படி வைத்தியசாலையில் நடைபெற்ற குருதி அழுத்தம், நீரிழிவு (கிளினிக்) சிகிச்சைக்கு காலை 6.30 மணிக்கு வருகைதந்த மேற்படி 200க்கும் மேற்பட்ட நோயாளர்கள், வைத்தியர்கள் பற்றாக்குறை காரணமாகப் பிற்பகல் 3.30 மணி வரை காத்திருந்து சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

நோயாளர்களுக்கு சிகிச்சை பெற இவ்வளவு நேரதாமதம் ஏற்பட்டுள்ளது.

தூர இடங்களிலிருந்து வருகைதரும், கட்டுப்பாட்டு உணவினை உட்கொள்ளும் மேற்படி நோயாளர்கள் ஒன்பது மணி நேரமாக எவ்வித உணவினையும் உணவகங்களில் பெற்று உட்கொள்ள முடியாத நிலையில் வயது வேறுபாடின்றி வெளிநோயாளர்கள் பகுதியில் தங்கிநின்று மன உளைச்சலுடனும், மிகுந்த கவலையுடனும் சிகிச்சை பெற்றுச் சென்றதனை நேரில் காணக் கூடியதாக விருந்தது. (சோ)

# க.பொ.த. (உ/த) பரீட்சை இன்று நடைபெறமாட்டாது

க.பொ.த. உயர்தர பரீட்சையில் இன்று நடைபெறவுள்ள பாடங்கள் எதுவும் நாட்டின் எந்தப் பகுதியிலும் நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளமையால் அவ் இடங்களில் பரீட்சையை நடாத்துவது சாத்தியமற்றது. இதனால் இன்று நடைபெறவுள்ள பரீட்சைகள் நடைபெறமாட்டாது என கருணாசேன கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.இப் புதிய தீர்மானத்திற்கமைய இன்று நடைபெறவுள்ள பாடங்களின் வினாத்தாள்களை வெளியிட வேண்டாம் என அவர் சகல பரீட்சை நிலையங்களின் பொறுப்பதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இதற்கமைய இன்றைய பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். நாளை நடைபெறவுள்ள பரீட்சைகள் நடத்தப்படுமா? இல்லையா? என்பது குறித்து இன்று பிற்பகல் அறிவிக்கப்படும் என கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கில் 155பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடி

வடமராட்சி கிழக்கு தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையினரின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் இலவச கண் பரிசோதனை முகாம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இம் மருத்துவ முகாமில் 210 பேருக்கு இலவச கண்சிகிச்சை நடைபெற்று 155பேருக்கு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாளும் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தினரும் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்கள் (11)

# அனிஞ்சயன்குளம் பிரிவில் ஊரக எழுச்சிப்பேரவைத் தெரிவு

அனிஞ்சயன்குளம் கிராமசேவகர் பிரிவில் ஊரக எழுச்சிப்பேரவை தெரிவும் சமகால அரசியல் கருத்துரை வழங்கும் நிகழ்வும் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய்ப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சேரன் மற்றும் அரசியல்துறையைச் சேர்ந்த தனம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் 9பேர் ஊரக எழுச்சிப்பேரவையின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

மேற்படி நிகழ்வுகள் அனிஞ்சயன்குளம் கிராமசேவகர் சோ. தேவதாசன் தலைமையில் இடம் பெற்றது.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் 970 பேருக்கு முகாமைத்துவப் பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்கள் மத்தியில் பணிபுரியும் நிறுவனங்களுக்கு நிர்வாக முகாமைத்துவ பயிற்சிநெறியை வழங்கியுள்ளது.

மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக கிடைக்கின்ற நிதியை எந்தவகையிலும் இலாப நோக்குடன் செயல்படுத்தக் கூடாது என்பதற்காகவும் மிகவும் திறமையான முறையில் செயற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 66 உள்ளூர் நிறுவனங்களுக்கும் 200 சமூக மட்ட அமைப்புகளுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இதில் அலுவலக முகாமைத்துவ பயிற்சி 400 பேருக்கும் திட்ட முகாமைத்துவப் பயிற்சி 75 பேருக்கும் நிதி முகாமைத்துவ பயிற்சி 75 பேருக்கும், அலுவலக முகாமைத்துவப் பயிற்சி 70 பேருக்கும் நீர் மற்றும் சுகாதார பயிற்சி 30 பேருக்கும் நில அளவை சிவில் தொழில்நுட்பவியல் பயிற்சி 15 பேருக்கும், கிராமிய தொண்டர்களுக்கான சமூக வலுவூட்டல் பயிற்சி 120 பேருக்கும் கணனி மற்றும் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்புப் பயிற்சி 20 பேருக்கும் முதலுதவிப் பயிற்சி 170 பேருக்கும் என மொத்தமாக 970 பேருக்கு மேற்படி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் போது அலுவலக உபகரணம், ஊழியர் சம்பளம், பயிற்சிச் செலவு என மொத்தமாக 11.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. (லோ)

## - வன்னிப் பிரதேசத்தில் -

# ம.நே.க. பிரிவுடன் சுவிஸ் நிறுவனமும் செயற்படுகிறது

(அலுவலக செய்தியாளர்)

மக்களின் மீள்குடியேற்றத்திற்கு இடங்களைத் தயார்ப்படுத்தும் வகையில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினருடன் இணைந்து சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

இந்நடவடிக்கை தலை மன்னார் பகுதியிலும், பாலமடு, பாப்பாமோட்டை பிரதேசத்தைச் சூழவுள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் இடம்பெற்று வருகிறது. மேற்படி நடவடிக்கையில் நவீன கண்ணிவெடி அகற்றும் உபகரணங் கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 3 நாட்களில் மட்டும் 60க்கு மேற்பட்ட கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாகவும் மேற்படி நிறுவனம் தெரிவிக்கின்றது.

இந்நிறுவனம் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளில் பணியாற்றுவதுடன் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் நவீன கருவிகளை பயன்படுத்தும் ஒரே நிறுவனம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

# இணக்கப்பாட்டுடன் செயற்படாவிடின் நாடுமுழுவதும் பாதிப்படையும்

## பிரதமர் -சனாதிபதி பிணக்கு குறித்து சிறிநாத் பெரேரா

பிரச்சினையான இக்காலகட்டத்தில் அரசியல் வாதப்பிரதிவாதங்களைக் கைவிட்டு சனாதிபதியும், பிரதமரும் தேசியப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் விடயத்தில் இணக்கப்பாட்டுடன் செயற்படமுன்வரவேண்டுமென சனாதிபதியின் சட்டத்தரணி சிறிநாத் பெரேரா கூறியுள்ளார்.

அபிவிருத்திலொத்தர்சபையை சனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்து கருத்து வெளியிடும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்நிலை காரணமாக நாட்டை தொடர்ந்து மோசமான நிலைக்கு இட்டுச்செல்வதற்குப் பதிலாக பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

தொடர்ந்து கூறுகையில் இதனையொரு அரசியல்பிரச்சினையாக கருதிசெயற்படாமல் நாட்டுமக்களின் நன்மைகருதி இப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்கவேண்டும். சனாதிபதியும், பிரதமரும் வேறு பிரச்சினைகளை ஆரம்பிக்காமல் ஒன்றிணைந்து தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வர வேண்டும். இல்லைவிட்டால் அதனால் ஏற்படும் பாதிப்பு நாடுமுழுவதையும் ஆட்டிப்படைக்கும் என மேலும் தெரிவித்துள்ளார்.

## - அரச அச்சகம் மீதான தாக்குதல் -

# பொலிஸ் விசாரணை அறிக்கை சில தினங்களில் வெளிவரும்

சிறிலங்கா அரசாங்க அச்சகத்தில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான பொலிஸ் விசாரணை அறிக்கை சில தினங்களில் சமர்ப்பிக்கப்படும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதியின் பொறுப்பின் கீழ் கொண்டுவருவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படவிருந்த நிலையில் இனந்தெரியாதவர்களால் அரசாங்க அச்சகம் தாக்குதலுக்கு உள்ளாகியது. இச்சம்பவத்தில் தொடர்புடையவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மல்லாகத்தில் புதிய படைமுகாம் அமைக்கும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு

## வீதிமறியலில் மக்கள் ஈடுபட்டனர்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் புதிய முகாங்களை அமைக்க சிறிலங்காப் படையினர் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைக்கு அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஏழாலை சந்திப் பகுதியிலும், மல்லாகம் நீதிமன்ற வளாக பகுதியிலுமே இந்தப் புதிய முகாங்களை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இப்பகுதிப் பொது மக்கள் ஒன்று திரண்டு மல்லாகம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதியை மறித்து காலை 9.00 மணியில் இருந்து பகல் 12.00 மணி வரை இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மறியல் போராட்டம் காரணமாக காலை 9.00 மணியில் இருந்து மதியம் வரை இப்பாதையூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது.

பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து பொதுமக்களின் கருத்தையும், படைத்தரப்பின் கருத்தையும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் இப்பகுதியில் முகாம் அமைப்பதை கண்டித்தும் இப்பகுதியில் முகாம் அமைப்பதால் இந்தப் பகுதி மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டியும் பொதுமக்கள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

இதேவேளை படைத்தலைமையகத்திடம் இருந்து முகாம் அமைப்பதை நிறுத்துமாறு உத்தரவு வரும் வரை முகாம் அமைக்கும் பணி தொடரும் எனப் படையினர் தெரிவித்துள்ளதுடன் தொடர்ந்தும் முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது.

# அமைச்சர் மகேஸ்வரனின் விஜயம் சித்தங்கேணியில் உருவாக்கிய பதற்றம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும் சித்தங்கேணி மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றி உள்ளது.

சித்தங்கேணியில் உள்ள ரெலிகொம் கட்டடப் பகுதியை அமைச்சர் மகேஸ்வரன் நேற்று பார்வையிடச் சென்றவேளையில் அந்தக் கட்டடப் பகுதியில் உள்ள பாடசாலை குறித்து மக்கள் அமைச்சரிடம் பிரஸ்தாபித்தார்கள்.

இதனை அடுத்து அமைச்சருக்கும் மக்களுக்கும் இடையில் வாக்குவாதம் முற்றி அது கைகலப்பு வரை செல்லுமளவுக்கு நிலைமை ஏற்பட்டது. இறுதியில் அமைச்சரும் அவருடன் சென்ற ரெலிகொம் நிறுவனத்தினரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

அந்தப்பகுதி மக்கள் தம்மைத் தாக்க வந்ததாக பொலிஸ் நிலையத்தில் அமைச்சர் குழுவினர் முறைப்பாடு செய்துள்ளனர்.


## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.

ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி. (3256)

# அணுவாயுதத் திட்டத்தை ஒருதலைப்பட்சமாக பழையநிலைக்கு எடுத்துச் செல்ல முடியாது!

## பாகிஸ்தான் திட்டவட்டமாக அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தான் தனது அணுவாயுதத் திட்டத்தை ஒருதலைப் பட்சமாகப் பழைய நிலைக்குக் கொண்டு செல்லாது என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் குஸித் முகமட் கஸ்காரி கூறியுள்ளார்.**

லண்டனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்ததாக இஸ்லாமாபாத்தில் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியா தனது அணுவாயுதக் கொள்கையை பழைய நிலைக்குக் கொண்டு சென்றால் தான் பாகிஸ்தானும் அவ்வாறு செய்ய முடியும் என்றார்.

தெற்காசியாவில் அணுவாயுதங்களைக் களைந்து விடுவதற்கான பாகிஸ்தானின் திட்டத்தை இந்தியா நிராகரித்துவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுடனான பேச்சுக்களைப் பொறுத்தவரை இதனைப் பாகிஸ்தான் நம்பிக்கையுடன் அணுகுவதாகவும் காஷ்மீர் பிரச்சினைக்கு எந்தவொரு குறிப்பிட்ட தீர்வையும் மனதில் கொண்டு இந்தப் பேச்சுக்களை அனுமதிக்கவில்லை என்றும் கஸ்காரி தெரிவித்தார்.

இந்தியாவுடன் வர்த்தக உறவுகளை மேம்படுத்திக் கொள்வது பற்றிக் குறிப்பிட்ட அவர் இந்தியா தனது எரிசக்தித் தேவைகளுக்காக பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் வழியாக துர்க்மெனிஸ்தானில் இருந்து எரிவாயுவைக் கொண்டு வருவதற்கான குழாய்களை அமைக்கும் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.


இந்த எரிவாயுக் குழாய்த் திட்டத்துக்கு சர்வதேச உத்தரவாதம் அளிக்கப் பாகிஸ்தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

## இந்தியர்கள் விடுதலை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிறைகளிலிருந்த இந்தியர்கள் இருபது பேர் நேற்று விடுதலை செய்யப் பட்டனர்.

வாகா எல்லையில் இந்த விடுவிப்பு நடைபெற்றது. கடந்த இரு வருடங்களாக சிறைகளில் இருந்தவர்களே பாகிஸ்தானால் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



மூழ்கிய கப்பலில் உயிரிழந்தவர்களின் நினைவாக புளோரிடா கடலில் புனித இடம் ஒன்றில் வெண் கலத்திலான பெயர்ப்பலகையை நிறுத்தும் அமெ. சுழியோடிகள்

## இஸ்ரேலிய-பலஸ்தீனப் பிரதமர்களுக்கிடையில் உயர்மட்டப் பேச்சு சுமுகமாக நிறைவடைவு

### - ஷரோன் நாளை புஷ்சைச் சந்திக்கிறார்

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனும் பலஸ்தீனப் பிரதமர் முகமட் சாவும் முக்கியமான பேச்சுக்களை நேற்று முடித்துக் கொண்டனர்.

இரண்டுவருட கால இடைவெளிக்குப் பின்னர் இடம்பெற்ற முதலாவது உயர்மட்ட மாநாடு இதுவாகும்.

ஜெருசலேம் நகரில் நேற்று முன்தினம் நிறைவடைந்த இக் கலந்துரையாடலின் அடிப்படையில் மத்தியகிழக்கில் நிரந்தர சமாதானம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2005 ஆம் ஆண்டில் பலஸ்தீன இராச்சியம் அமைக்கப்பட வேண்டும் என்பதும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இருந்து இஸ்ரேல் வாபஸ்பெறவேண்டும் என்றும், இரு தரப்பினரும் பரஸ்பர தாக்குதல்களை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதும் சமாதான ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இதற்கிடையில் மேற்குக் கரையோர நகரமான கெப்ரனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குலில் இரண்டு யூதக் குடியேற்ற வாசிகள் இறந்துள்ளனர்.

அதேசமயத்தில் காசா முனையில் இஸ்ரேலிய இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில ஒரு பலஸ்தீன தீவிரவாதி கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் நாளை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சைச் சந்தித்து உரையாடவுள்ளார். பலஸ்தீன இஸ்ரேலியப் பிரதமர்களின் மாநாடு நடைபெற்றுள்ளது.



கொங்கோ குடியரசிலிருந்து புகலிடம் தேடிச் சென்ற மூதாட்டிக்கு போர்னியோ விமான நிலையத்தில் ஐ.நா. வாகனத்திலிருந்து இறங்க உதவியளிக்கப்படுகிறது.

## தீவிரவாதிகள் ஊடுருவலை அனுமதிக்கப் போவதில்லை!

### - சவுதி மன்னர் கூறுகிறார்

(றியாத்)


தீவிரவாதிகளை சவுதிஅரேபியாவுக்குள் ஊடுருவ அனுமதிக்கப்போவதில்லை என சவுதி அரேபிய மன்னர் பாகித் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையிலேயே அவர் இக்கருத்தினைத் தெரிவித்துள்ளார்.


சவுதிஅரேபிய மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தமது கடமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சவுதி அரேபியாவில் சமூக சீர் திருத்த நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்படும் என்று மன்னர் பாகித் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குல்காரணமாக34 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து சவுதி மன்னர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.




நாசா விண்வெளிஆராய்ச்சி நிலைய தொலைக்காட்டி மூலம் பெறப்பட்ட படத்தில் தென்னரைக்கோளத்தில் நெப்ரியூன் கோளின் வெவ்வேறான தோற்றங்கள்.



ஸ்பெய்ன் நாட்டு காளை அடக்கும் இறுதிப்போட்டியில் காளையால் தாக்கப்பட்டு வீழ்ந்து கிடக்கும் வீரர் பெர்னாண்டோ றொபீள்னோ

## ஆசியா விலுள்ள அமெரிக்கர்கள் மலேசியா செல்வது ஆபத்தானது!

### - புஷ் நிர்வாகம் அறிவிப்பு

ஆசிய நாடுகளில் உள்ள அமெரிக்கர்கள் மலேசியாவுக்கு பயணம் செய்வது ஆபத்தானது என அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்தோனேசியாவின் பாலை தீவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் போன்று மலேசியாவிலும் பயங்கரவாதத் தாக்குதல் நடைபெறலாம் என்று அமெரிக்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளது.

மலேசியா தீவகப்பகுதிகளுக்கு அமெரிக்க பிரஜைகள் பிரயாணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தியுள்ளது.

## அரசியல்வாதிகள் பொய் பேசுவது நவீன சனநாயகத்திற்கு அவசியம்!

### அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் கிலன்மேவி

(லண்டன்)

நவீன சனநாயக முறையில் அரசியல் வாதிகள் பொய்பேசுவது அவசியமானது என்று லண்டனில் உள்ள விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் ஒன்று தெரிவித்துள்ளது.

அரசியல் விஞ்ஞான விரிவுரையாளரான கிலன்மேவி அரசாங்க பத்திரிகை ஒன்றில் இது தொடர்பான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். குறிப்பாக அரசியல்வாதிகள் தங்களது நேர்மைக்காக பொய் பேசுவதாகவும் அவர் தனது கட்டு ரையில் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் பொய்பேசுவதை ஒரு பயிற்சியாக மேற்கொண்டு அதனை தமது கொள்கையின் ஒரு பகுதியாகக்கொள்ளவேண்டும் எனவும் அவர்தெரிவித்துள்ளார். அறிக்கை ஒன்று விடும் போது அதில் அடங்கிய பொய் அழகைச் சேர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சரவையில் மாற்றம் புதியவர்களும் இணைப்பு

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவை விரைவில் மாற்றியமைக்கப்படும் என பிரதமர் வாஜ்பாய் நேற்றுத் தெரிவித்தார்.

ஹிமாசலப் பிரதேசத்தில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் புதியவர்கள் சிலரும் அமைச்சரவையில் இடம்பெறுவர் என்று கூறியுள்ளார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவி மம்தா பனர்ஜிக்கும் அமைச்சரவையில் இடமளிக்கப்படும் என ஊகங்கள் வெளியாகியுள்ளன.

எனது அனுமதியைப் பெற வேண்டும். இல்லையேல் அரசை கலைத்துவிடுவேன்" எனது உத்தரவிற்கு அமைய பாராளுமன்றத்தைக் கலைப்பதன் மூலம்

சனாதிபதி சுவீகரித்தமையானது அரசியல் விதிமுறையிலும் சம்பிரதாய முறையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவே அனை வராலும் கருதப்படுகின்றது. நீதிபதியும்




# கேலிக்கூத்தாகும் மக்கள் ஆணை!



"எவ்வகையான அரசியல் காரணங்களி னாலோ அவர்களுக்கு (ஐ.தே.மு அரசுக்கு) பாரளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கவே செய்கிறது. எதனையும் முடிவெடுக்கும் முன்பு நடைமுறை அரசியலைப் பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும்" இவ்வாறு வெளி நாட்டுச் சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டியளித் திருக்கும் சனாதிபதி சந்திரிகா இதன் மூலம் பாரளுமன்றத்தில் பெரும்பான்மை உள்ளதை யும், எதனையும் முடிவெடுக்கும் முன்பு அரசியல் நிலைபற்றி அறிந்திருக்கவேண்டும் என்பதையும் அவரே ஒப்புக்கொண்டுள்ளமை புலனாகிறது.

இதனால் ரணிலின் அரசாங்கத்தை ளைக்கொண்ட பாராளுமன் றம் என்பதால் பாராளுமன்று ஊடாகவே மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. அதற் குத்த டையாக அமைவது ஒரு குழுவினருக்கு மக்கள் வழங்கிய சுயாதீன ஆணைக்கு எதிராக முடிவெடுத்தால் பிரச்சினை அதிகரிக்கும். அது மக்களின் சுயாதீனத் துக்கு எதிரான செயலாகும். பாராளுமன்றம் ஊடாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங் கத்தை வீழ்த்தும் சதிச்செயலாகும். மட்டு மன்றி பாரளுமன்ற அதிகாரங்களைமீறும் செயலுமாகும்.

தாரகோணத்தில் இருந்து அவதானிக்கும் சட்டவாளர்கள் இதுபற்றி விவாதிக்கக்கூடும்.



ஆயினும் சனாதிபதி, பிரதமர், அரசு, நீதி, சட்டம். அரசமைப்பு என்பவற்றிற்கும் மேலாக மக்கள் சக்தி ஒன்று இருப்பதை சிலர் குறைத்து மதிப்பிடுகின்றனர் போலும்.

அபிவிருத்தி லொத்தர் சபை யை யாருடனும் பேசித்தீர்மானிக் காது எடுத்தவுடனேயே தமது பொறுப்பில் எடுத்துக் கொண் டமை இன்று பெரும் பிரச்சி னையாக உருவெடுத்துள்ளது. மக்களின் சுயாதீனம் பிரிவு படுவது அரசியல் பின்னணியின் காரண மாகவே லொத்தர்சபை பொறுப்பேற்றமை பற்றி உரிய அமைச்சருக்கு அறிவித்திரு

சமாதா னத் திட்டத்தையும் நிறுத்து வேன்"

இவ்வாறு சஞ்சிகை ஒன் றுக்கு பேட்டியளித்த சந்தி ரிகா பாவம். லொத்தர்சபை விவகாரம் தொடர்பாக தமது உத்தரவை அச்சிட்டு வெளி யிட முடியாத நியையில் உள் ளார். அதற்குக் காரணம் இருக்கிறது. சனாதிபதிபதியின் அதிகாரத்தைப் பிரயோகிக்க முடியாத அரச இயந்திரம் இப்போது உருவாகியுள்ளமை யாகும். சனாதிபதியின் உத் தரவை செயல்படுத்தும் அரச இயந்திரம் ரணிலும் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச் சரவையுமாகும்.

அவ்வாறான அமைச்சரவை யும் பிரதமரும் மாற்றுக் கட்சியை சேர்ந்தோராவர். இவர்கள் சனாதிபதியின் தலைமையிலான கட்சிக்கு எதிரானவர்கள். சனாதிபதி தலைமையிலான கட்சியை வீழ்த்தி விட்டே மக்கள் தற்போ தைய ஆட்சி இயந்திரத்தை ரணிலிடம் வழங்கியுள்ளனர்.

இதனால் சனாதிபதி நினைத் தமாதிரி அவரின் தேவைக்கேற்ப மாற்றம் செய்வது முடியாத காரியமா கும். அப்படி மாற்றங்கள் செய்வதாயின் ஆளும் கட்சியினரின் ஒத்துழைபபுடனேயே செய்ய முடியும்.

தேவையாயின் அரசியலமைப்பின்படி பிரத மர் சனாதிபதியின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்ற விதியை ஏற்படுத்தியுள்ளதா

அவ்வாறான கருத்தையே வெளிப்படுத்தி யுள்ளதாகத்தெரிகிறது. எனினும் ஆட்சிய திகாரம் இல்லாத நிலையில் ஆட்சியதிகாரம் உள்ள அரசுக்கூடாகவே எதனையும் செயல் ப்படுத்த முடியும். அதற்கான உத்தரவு அமைச்சரவை மூலம்தான் பெறவேண்டுமாயின் இந்த விவகாரத்தினால் தேவையற்ற மோதல் கள் உருவாகும்நிலை தோன்றும். நீதிப திக்கும் கூட மக்களின் சுயாதீன சக்திபற்றிக் கவனம் ஏற்படும். காரணம் சனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தினால் மக்களினால் அமைக்கப்பட்ட அரசின் அதிகாரத்தைப் பறிப்பதானது மக்களின் சுயாதீனத்தை சுலப மானதாக கருதுவதொன்றாகும். அதனை மக்கள் ஏற்கமாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட காலத் துக்கே மக்கள் ரணிலுக்கு தமது ஆதரவை வழங்கியுள்ளதாக சனாதிபதி கருதி மக்களால் வழங்கப்பட்ட ஆணையை தமது அதிகாரத்தினால் நசுக்க முற்படுவதா யின் அது சனநாயகம் என்று கூறிவிட முடி

மதித்து நடக்க வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்கிறார். அப்படியாயின் அவ்வர சாங்கத்தைக் கொண்டு நடத்த அவர்களுக்கு இடமளிக்க வேண்டும் என்பது தெளிவு. மறு புறத்தில் நோக்கும் போது அப்படியான பெரும்பான்மை இல்லாதவிடத்து அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அவர் அறிந்தே இருக்கிறார். அந்த வகையில் அரசை மாற்றியமைக்கவும் தயங்கமாட்டார். ஆயினும் இந்த அரசுக்கு அவர் இடமளித் திருப்பது அதனை ஆதரிப்பதற்காக அன்று. எவ்வாறான அதிகாரம் ஒன்று அவருக் கிருப்பினும் அதனை செயல்படுத்துவது சனநாயகம் அல்ல என்பதனை அவர் அண்மையில் லண்டனில் இருந்தும் வெளிப் படுத்தியிருக்கிறார்

வேறு வகையில் கூறுவதாயின் அரசிய லமைப்பின்படி தமக்குப் பல அதிகாரங்கள் இருப்பதாகவும் சனநாயகத்தை சிந்திக் கும்போது அவ்வதிகாரத்தைப் பிரயோகிக் காமல் இருப்பதாகவும் அண்மையில் அவரே கூறியிருக்கின்றார். அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. அதாவது அவருக்கோ அவரின் கட்சிக்கோ மக்கள் ஆதரவு வழங் காமையாகும். அப்படி வழங்கியிருந்தால் அவரின் கட்சியைச் சேர்ந்த ஒருவர் பிரதமரா கியிருப்பார்.

இதனால் நிறைவேற்று அதிகாரம் அவரிட மிருப்பினும் அரசாங்கத்தை அமைத்து நிர்வகிக்கும் அதிகாரம் அவருக்கில்லை. அது போலவே தம்மால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றிற்குப் பதில் கூறவேண்டிய பொறுப்பும் அவருக்குள்ளாகிறது. காரணம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்க

ப்பினும் அதற்கான வர்த்தமானி அறிவித் தலை வெளிப்படுத்தாமையினால் அது தற்போதும் மிலிந்த மொறகொடவின் கீழ் இயங்குவதாவே உள்ளது. அதற்குக் காரணம் இந்நாட்டின் அதிகாரம் மக்களின் ஆணைப்படி இரு குழுவினரிடையே இருப்பதாகும். அச்ச கம் அரசுக்கு- அதாவது இறைமைக்குச் சொந்தமானது. அரசாங்கம் நடத்தப்படுவது ரணிலின் தலைமையிலான அமைச்சரவை யினால். அச்சக ஊழியர்கள் பணியாற்றுவது ஊடகத்துறை அமைச்சின் கீழாகும். அவ்வமைச்சின் உத்த ரவிற்கிணங்கவே அவர்கள் கடமையாற்றுவர் இதன் காரண மாக சனாதிபதியின் உத்தரவை அச்சிட மறுப்புத் தெரிவிக்காமல் அச்சக நிர்வாகம் இவ்விவகாரத்தை நீதிபதியின் தீர்ப்புக்கு விட்டது.

சனாதிபதிக்கு இருக்கும் அதிகாத்தை குறைந்து மதிப்பிடமுடியாதது. அது நிறை வேற்று அதிகாரம். பிரதமரை நீக்கிவிட, அமைச்சர்களை நீக்க, அமைச்சுகளை. சுவீகரிக்க, பாராளுமன்றத்தைக் கலைத்து விட அனைத்து அதிகாரமும் அவருக்கு இருப்பது உண்மையே. அதுபோலவே தேவையான போது பிரதமருடன் கலந்து ரையாடி முடிவெடுக்கும் அதிகாரமும் இருக் கின்றது. "தேவையானபோது" என்றதை அவதானிக்கும்போது தேவையில்லாத போது என்ற மறுபக்கத்தையும் சிந்திப்பது நன்று. அதனையே பொ.ஐ.மு அரசும் கொண்டுள்ளது. (தேவையில்லாத விடத்து நீக்கிவிடல் எனும் முடிவு) அதனை சனாதிபதியும் பலமுறை கூறியிருக்கிறார்.

"பிரதமர் எந்தத் தீர்மானத்துக்கும் வருமுன்

னது நிறைவேற்றதிகாரம் ஆட்சிய திகாரம் என இரு குழுக்களிடையே ஆட்சியமையும் போது பயன்படுத்துவதற்காகும்.

லொத்தர் சபையைப் பொறுப்பேற்கும் வரை யும் அரசாங்கத்தில் சனாதிபதிக்கும் பிரதம ருக்குமிடையே புரிந்துணர்வு செயல்பட்டே வந்துள்ளது. அமைச்சரவை தெரிவு, அமைச் சர்கள் தெரிவு அவர்களுக்கான பொறுப்புக் களை தெரிவுசெய்தல் போன்றவை பிரதம ரின் ஆலோசனைப்படியே நடந்தன. அதற் குக் காரணம் சனாதிபதிக்கு அல்லது அவ ரின் கட்சிக்கு ஆளும் அதிகாரத்தை மக்கள் வழங்காமையாகும். அரசியலமைப்புச் சட்டத் தின்படி பிரதமரையும்- அமைச்சரவையையும் நியமித்தல், விலக்கல். நினைத்தபோது பாரா ளுமன்றத்தைக் கலைத்தல் போன்ற அதிகா ரம் அவருக்கிருப்பினும் ஆட்சியதிகாரத்தை மக்கள் வழங்கியது ரணிலின் கட்சிக்கே.

ஒருவருக்கு அதிகாரம் வழங்கியிருக்கும் போது இன்னொருவர் அதிகாரத்தைக் கையா ளுவதாயின் அங்கு மக்களின் சுயாதீனப் பண்பு இல்லாது போகும். சனாதிபதியையும், ஆளும் கட்சியையும் உருவாக்கியிருப்பவர் கள் மக்களே. மக்களின் சுயாதீனத்திற்குக் கட்டுப்பட வேண்டியது சனாதிபதியின் அதி காரம் ஆகும். சனாதிபதியின் அதகிாரத்துக் குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் மக்க ளுக்கில்லை.

ஆதலால் சனாதிபதி செயல்பட வேண்டி யிருப்பது ரணிலின் அரசுக்கூடாகவே. மனச் சாட்சியின்படி மக்களால் தெரிவு செய்யப் பட்ட அரசாங்கத்துடன் ஒத்துப்போவதே சனா திபதியின் தற்போதைய பணியாகும்.

தான்தோன்றித்தனமாக லொத்தர் சபையை

யாது. இந்தப் பிணக்குகளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சித்தலைவர்கள் தீர்க்கவில்லையாயின் மக்கள் தலையிட்டுத் தீர்க்கவேண்டி வரும் என்பதை ஆட்சியாளர் கள் ஏற்றுக் கொள்ளவேண்டிவரும்.

தான் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்க ளில் தம்மை ஆட்சிப்பீடம் ஏற்றிய மக்களே தமக்கெதிரான கட்சியை ஆட்சிப்பீடமேற்றி அதன் தேவைக்கேற்ப ஆட்சி நடத்த இடமளிக்காதவிடத்து அங்கு "சிவில் யுத்தம்" ஒன்று தோன்றுவது தவிர்க்கமுடியாததாகும்.

அதனால் இன்று சட்டத்திலும் அரசியலும் ஒழுங்குவிதிகள் பயன்படுவது அரச பாலன த்துக்கே எனில் அதற்கெதிராக மக்கள் ஆர்ப்பாட்டமின்றி இருப்பின் ஆச்சரியப்

**மொழியாக்கம்-வடிவேல்**

படுவதற்கில்லை. இது ஒருபுறம்நியாயமானதே. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் தலைவர் ஒருவர் நிறைவேற்று அதிகாரத் தைப் பயன்படுத்தி மக்கள் தெரிவுசெய்த அரசுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதை சனநாயகத்தை விரும்பும் மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக மாட்டார்கள் என்பதே வெளிப்பாடான உண்மை

இவ்வாறான பின்னணியில் உள்ளோர் அரச நிறுவனத்தின் அதிகாரத்தை தமக்கு உரித் தாக்குதல் அரசாங்கத்துடன் தமக்குள்ள அரசியல் விவகாரத்தை அரசியலமைப்பு விதிகளுக்கமைவானதாகும் என கருதினால் கருத்து வேறுபாடு தோன்றலாம்.

# அரசியலமைப்பு நிறைவேற்றதிகாரம் பற்றி சமாதான முன்னெடுப்பு வேளை பேசக்கூடாது

**-வர்த்தக, பொருளியல் பிரதிநிதிகள் வலியுறுத்து**

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நேரத் தில் அரசியலமைப்பு நிறைவேற்ற திகாரம் பற்றிப் பேசக் கூடாது என வர்த்தக, பொருளியல் பிரதிநிதிகள் குழுவினர் தெரிவித்துள்ளனர். 2001ம் ஆண்டு அதல பாதாளத்தில் வீழ்ந் திருந்த பொருளாதாரம் 2002 ஆம் ஆண்டில் அதன் வளர்ச்சி மிக வேகமானதாகக் காணப்பட்டது. இது மேற்சொன்ன போட்டி காரண மாக வீழ்ச்சியுற நேரிடும் எனவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

அதிகாரம், அரசியலமைப்பு என்ப வற்றுக்கிடையில் எழுந்துள்ள தற்போதைய நெருக்கடி நிலைக்கு, பேச்சுக்கள் மூலமே தீர்வு காண வேண்டும் எனக் கூறும் பொருளியல் நிபுணர் அஜித் நிவாட் கப்ரால் பிரதமரின் கருத்தும் இதுவேயாகும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துக் கூறுகையில், எந்த விவகாரங் களுக்கும் சட்டத்தின் கைகளை நாம் எதிர்பார்க்க முடியாது. நாட்டின் நிலைமையைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றார்.

மர்கன்டைல் பேச்சனட் வங்கிப் பணிப்பாளர் கூறும் போது, கடந்த வருடத்தில் ஓரளவு சீரான நிலைக்குத் திரும்பிய பொருளாதாரம் மீண்டும் பிரச்சினைகள் தோன்றி னால் மீள முடியாத துன்பத்திற்கு மக்களும் நாடும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்றார்.

# தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கு முதலிடம்!

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் அபிவிருத்திக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது என அமைச்சர் திம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

புதிய தொடர்பு தொழில்நுட்ப வசதிகள் பெற்றுக் கொள் ளாதவர்கள் கல்வி, சுகாதார பராமரிப்பு,சிறந்த நிர்வாகம் ஆகியவற்றை அனுபவிக்க முடியாதவர்களாகவும், அவர்க ளது சொந்த வாழ்க்கை வசதிகளை அபிவிருத்தி செய்துகொள்ள முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வன்னியில் விவசாய ஆராய்ச்சிக்கு புனர்வாழ்வு கிடைக்குமா..?

விவசாயம் வன்னிப் பிரதேச மக்களின் பிரதான தொழிலாகும். இங்கு பரந்து விரிந்து போயிருக்கும் பெருநிலப்பரப்பும் எண்ணற்ற குளங்களும் விவசாயத்தை மேம்படுத்தி நிற்கின்றது.


பிரதானமாக நெற்பயிர்ச்செய்கையும், அதனோடிணைந்த உப பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுத் தன்னிறைவு காணும் அளவுக்கு விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

மாறிவரும் நவீன யுகத்தில் விவசாயத்துறையும் உலகில் வளர்ந்து விட்டது. விவசாயத்துறை தொடர்பான ஆராய்ச்சிகளும், அபிவிருத்தி நடவடிக்கைகளும் அதனை வளர்ச்சிப்போக்கிற்கு இட்டுச் செல்கின்றன.

உலகின் அதிகரிக்க முடியாத மட்டுப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களில் நவீன முறைகளைப் பயன்படுத்தி உச்ச பயன்பாடு பெறப்பட்டு வருகின்றது.

இலங்கையின் தென்பகுதிகளிலும் விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் வன்னிப்பிரதேசத்தில் உள்ள "விவசாய ஆராய்ச்சி திணைக்களம்" தற்போது உள்ள நிலையினைப் பார்க்கும்



கார்த்திகேசு சிறிரஞ்சன் – பொறுப்பதிகாரி, வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்

போது இங்கு அரசாங்கத்தால் விவசாய அபிவிருத்திப் பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நோக்க முடியும்.

ஏ-9 வீதியில் காடுமண்டிப்போயுள்ள காணிப்பகுதி ஒன்றில் "விவசாய ஆராய்ச்சிதிணைக்களம்" என்ற, பெயர்ப்பலகை மட்டும் மரங்களின் இலைகிளைகளால் மூடப்பட்ட நிலையில் வீதியால் போய்வருபவர்களின் கண்களுக்குத் தென்படுகின்றது.

பெயர்ப்பலகையின் விபரத்துக்கும், அதன் மூலம் விவசாயத்துக்கான எவ்வாறான பணிகள் அத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் சாதாரணமாகவே நோக்கும் எவராலும் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால், அந்தத் திணைக்களக்காணியும் அங்குள்ள கட்டடங்களும் இருக்கின்ற நிலையினைப் பார்க்கும் போது மரணவாசலைத் தட்டிக்கொண்டிருக்கும் இந்த நிலையத்துக்குத்தான் முதலில் 'குளுக்கோஸ்' ஏற்றி அவசர சிகிக்சை மேற்கொள்ளவேண்டும் என்று நினைக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையத்துக்கே அவசர சிகிச்சை தேவைப்படும் போது அதனால் எவ்வாறு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

இடிந்து போயுள்ள பல கட்டடங்களின் நிமிர்ந்து நிற்கும் ஒரு அறையின் நாலுபக்கச் சுவர்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு அந்த அலுவலகம் இயங்குவதற்காகத் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மிகக் குறுகிய இடத்தில் ஓரிரு அலுவலக உபகரணங்களும் ஊழியர்களும் மட்டுமே அங்கு தென்பட்டனர்.

இது மாவட்டம் ஒன்றுக்கான விவசாய ஆராய்ச்சித் திணைக்களம் அல்ல, வடபிராந்தியத்திற்கான விவசாய ஆராய்ச்சி திணைக்களம் ஆகும்.

இருபத்தைந்து ஏக்கர் விவசாயப்பயிர்ச்செய்கை மேட்டுக்காணியையும், பத்து ஏக்கர் வயற்கணியையும், கொண்டு விவசாய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. இவையெல்லாம் 1996ஆம் ஆண்டுக்கு முற்பட்டகாலத்தில்தான்.

ஆனால் கிளிநொச்சியை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையை அடுத்து ஆராய்ச்சி நிலையம் அத்தொழிந்து போனது.



இடிந்துபோயுள்ள விவசாய ஆராய்ச்சி நிலைய கட்டடங்களில் ஒருபகுதி

இந்த ஆராய்ச்சி திணைக்களத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய மண்பரிசோதனை நோய்த்தாக்கங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள், மற்றும் விவசாய விதை தானிய உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மண் தொடர்பான ஆராய்ச்சிகளை காலத்துக்குக்காலம் மேற்கொண்டு அவை அடைந்துள்ள நிலைகளையும், எவ்வாறான பிரதேசங்கள் எவ்வாறான பயிர்ச்செய்கைக்கு உகந்தன என்பதையும் இந்த நிலையம் தெரியப்படுத்தும்.

அத்துடன் நோய்த்தாக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்து ஆராய்ச்சிகளை நடத்தி செய்யப்படவேண்டிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

அதிக விளைச்சல் தரக்கூடிய புதிய வகை இனங்கள் தருவிக்கப்பட்டு அவை இப்பிரதேசத்தில் பயன்பாட்டுக்கு உகந்தனவா? என்பது தொடர்பாக ஆராய்ச்சிகளை நடத்தி அதிக விளைச்சலைத் தரக்கூடிய விவசாய உற்பத்தி இனங்கள் அறிமுகப்படுத்தப்படும்.



ஆராய்ச்சிக்காக புதிய கச்சான் இனம்

அத்துடன் விவசாயம் தொடர்பான திமர்த் தாக்க மாற்றங்கள் தொடர்பாக ஆராய்தல் உட்பட பல ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தப் பணிகள் எதுவும் இப்போது இடம்பெறுவதில்லை. ஏனெனில் இங்கு ஆளணி வசதிகளோ,ஆராய்ச்சிக்கான அடிப்படை வசதிகளோ இல்லை.

1996 ஆம் ஆண்டுக்கு முன்பு 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் இருந்தனர். தற்போது ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் எவருமே இல்லை. விவசாய போதனாசிரியர்கள் ஆறுபேர் இருந்தனர். தற்போது ஒருவர் மட்டுமே உள்ளார். பண்ணை முகாமையாளர்கள், பண்ணை உதவியாளர்கள், ஆராய்ச்சி உதவியளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என பெருமாளவானோர் பணியில் இருந்தனர். ஆனால், இப்போது சாதாரண ஊழியர்களாக ஆறுபேர் மட்டுமே உள்ளனர்.

இருப்பினும் இருக்கின்ற ஊழியர்கள் மூலம் சிறு ஆராய்ச்சிப் பணிகள் இடம்பெறுகின்றன. அதாவது கிடைக்கின்ற புதிய வகை இனங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் மிகச் சிறிய அளவில் இடம்பெறுகின்றன. இந்த ஆராய்ச்சிப் பணியில் நெல் மற்றும் கச்சான் பயிர்கள் உள்ளன.

ஏக்கர் ஒன்றுக்கு 42 மூடை விளைச்சல் தரக்கூடிய B.W 361 என்ற நெல் இனம் மட்டும் பரந்தனில் உள்ள ஆராய்ச்சிக்கான வயற் காணியில் செய்கைபண்ணப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் எட்டுவகை நெல் இனங்களும் மிகச் சிறு அளவில் ஆராய்ச்சிக்காக பயிரிடப்பட்டுள்ளன.

மேலும், கச்சானில் ஒன்பது வகைப் புதிய வர்க்கங்களும் ஆராய்ச்சிக்காகச் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆனால், இவை எவ்வளவு வேகமாக ஆராய்ச்சி செய்யப்பட்டு மக்களைச் சென்றடையும் என்பது கேள்விக் குறியே.

இங்கு 24 மணி நேரமும் இயங்கக் கூடிய நவீன தொழில் நுட்ப வசதி கொண்ட ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

இந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் புனரமைப்புக் குறித்தும், தேவை குறித்தும் விவசாய அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அமைச்சு பணம் இல்லை எனக் கைவிரித்து விட்டது. புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் நிதி கோருமாறு விவசாய அமைச்சு அறிவுரையும் வழங்கியுள்ளது.

நீண்ட காலமாக இப்பிரதேசத்தில் மண் தொடர்பான ஆய்வுகளோ, நோய்த்தாக்கம் மற்றும் புதிய இனங்கள் தொடர்பான ஆய்வுகளோ இடம்பெறவில்லை.

இங்குள்ள விவசாயிகளும் பாரம்பரியமான முறையில் நவீன நடைமுறைகள் இன்றித் தமது விவசாய உற்பத்திகளில்ஈடுபட்டுக் கிடைக்கின்ற அறுவடையினை மட்டும் பெற்று வருகின்றனர்.

**ஜெயக்குமார்**

எவ்வாறாயினும், இந்த ஆராய்ச்சி நிலையத்தை மிக விரைவாக இயங்க வைக்க வேண்டிய கட்டாய தேவை சகலருக்கும் உள்ளது. அதனைச் செய்யக் கூடிய சாத்தியப்பாடான காலப்பகுதியும் இதுதான்.

□□□

# முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்குணவு; தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்குணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுவருகின்றது.

மேற்படி மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா வலயம், மட்டக்களப்பு வலயம், பட்டிருப்பு வலயம் ஆகிய மூன்று வலயங்களிலும் 431 முன்பள்ளி பாடசாலைகள் இயங்கிவருகின்றன, இதில் 700 க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணிபுரிவதாகவும், இம்முன்பள்ளி பாடசாலையில் சுமார் 5000 க்கு மேற்பட்ட மாணவர்களும் கல்வி பயின்றுவருவதாகத் தெரிகின்றது. இதன் முன்னோடியாக மட்டக்களப்பு மாவட்ட மூன்று வலயங்களிலுமுள்ள முன்பள்ளி ஆசிரியர்களை வலய மட்டத்தில் வரவழைத்து போசாக்குணவு பற்றிய ஆலோசனைகளை வழங்க எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10 மணிக்கு பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும், 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு வந்தாறுமூலை மகா வித்தியாலயத்திலும், அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு மகாஜன கல்லூரி மண்டபத்திலும் ஒன்றுகூடல் இடம்பெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றில் சமுகமளிக்கவில்லை; கைதானவர் அதிர்ச்சி மரணம்!

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச பிரிவில் நபரொருவர் தாபரிப்பு வழக்கொன்றில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் ஒப்படைக்கும் வேளையில் சிறைச்சாலை வாயிலருகில் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார். திருக்கோவில் கடற்கரை வீதியைச் சேர்ந்த தேவராசா தயாசீலன் என்பவரே கைதாகி சிறைச்சாலையில் ஒப்படைக்கும் போது மயங்கி விழுந்து உடன் மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெற்ற ஒரு மணித்தியாலத்தின் பின் மரணமானதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. சந்தேக நபருக்கு எதிராக தாபரிப்பு வழக்கு தொடரப்பட்ட போது வழக்குகளுக்கு சமுகம் கொடுக்காததையிட்டு நீதிமன்றத்தில் நீதவான் சந்தேக நபரைக் கைதுசெய்ய உத்தரவு பிறப்பித்திருந்தார்.

# கிளி.மாவட்ட நீர்ப்பாசனக் குளங்கள்

# 20 வருடங்களாகப் பேணப்படவில்லை!

## அரச அதிபரின் அறிக்கை கூறுகிறது

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் முதல் சிறிய குளங்கள்வரை கடந்த 20 வருடகாலமாக உரிய முறையில் பேணப்படாத நிலையில் பெரும் சேதமடைந்துள்ளதுடன் பல குளங்கள் முற்றாக அழிந்தும் உள்ளன.**

கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களின் விளைவாக குளங்களின் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கேற்ற உள்ளீடுகள் இன்மை அரசுகளின் திட்டமிட்ட புறக்கணிப்பு மற்றும் ஆளணிப்பற்றாக்குறை காரணமாக இந்நிலைமை ஏற்பட்டது.

கிளி. மாவட்டத்திலுள்ள 8 பாரிய நீர்ப்பாசனக்குளங்களும் 283 சிறுகுளங்களும் மேற்படி காரணங்களால் உரிய முறையில் பேணப்பட முடியாத நிலை ஏற்பட்டதென கிளி.அரச அதிபரின்அறிக்கையின்மூலம்தெரியவந்துள்ளது.

இதேபோன்று வடகிழக்கின் ஏனைய மாவட்டங்களிலுள்ள நீர்ப்பாசனக்குளங்கள் அனைத்துமே சீரான முறையில் பேணப்படவில்லை.

இருப்பினும் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையில் நியாப்திட்டத்தின் மூலம் மாகாண ரீதியாக முன்னுரிமை அடிப்படையில் சில குளங்களின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(சோ)

## ஊக்குவிப்பு

(திருமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் இரு அரச சார்பற்ற நிறுவனங்கள் திருமலையில் சுதேச வைத்தியத்துறையை ஊக்குவிப்பதற்கான நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளன. இதன் மூலம் வைத்தியசாலையொன்றும் மூலிகைத் தோட்டமொன்றும் அமைக்கப்படவுள்ளது.

## மோதலில் மாணவன் பலி!

(சிலாபம்)

இரு மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் இருபது வயதுடைய மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு புத்தளத்தில் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்தவர் கடந்த கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றியவர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

சந்தேக நபர்களான இரு மாணவர்கள்தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கேப்பாப்பிலவு அ.த.க.பா.யில் ஆசிரியர் பற்றாக்குறை

வற்றாப்பளை கேப்பாப்பிலவு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை யில் ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாக அப்பாடசாலைப் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரைதுறைப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட இப்பாடசாலை நீண்ட வருடங்களாக பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான வகுப்புக்கள் கொண்ட இப்பாடசாலையில் 05 ஆசிரியர்கள் தேவையான நிலையில் தற்போது ஒரு நிரந்தர ஆசிரியர் மட்டுமே உள்ளார். இவ்வாசிரியரும் ஆரம்பக்கல்வி கற்பித்தல் ஆசிரியர். 85 மாணவர்கள் தற்போது உள்ளனர் இம்மாணவர்களுக்கு அதிபருடன் ஒரு ஆசிரியர்மட்டும் கல்விகற்பிக்க முடியுமா எனப் பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர். இரண்டு தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் கற்பித்தல் நடவடிக்கை இங்கு மேற்கொள்ளப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வேளை மேற்படி பாடசாலையில் மாணவர்களுக்கான குடிநீர் இல்லாதநிலையும் உள்ளது. அப்பாடசாலைக்கான கிணறு இன்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு வெளியே வீதி ஓரமாகவுள்ள குழாய்க் கிணற்றைக் குடிநீருக்காகப்பயன்படுத்தி வருகின்றனர் அத்தோடு அப்பாடசாலையின் மலசலகூடம் பாழடைந்த நிலையில் பயன்படுத்த முடியாதுள்ளதால்ஆசிரியர்கள் முதல்மாணவர்கள்வரை சிரமப்பட்டுவருகின்றனர்(ஆ)

## வடக்கு-கிழக்கு நீர்ப்பாசனக் குளங்கள் அனைத்தும் புனரமைக்க நடவடிக்கை

### அமைச்சர் ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ள சகல குளங் களையும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்தி இந்தப் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளன என அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள பெரிய, நடுத்தர, சிறிய அளவிலான குளங்கள் அனைத்தும் புனரமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியாவில் நெற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அமைச்சா இக்கருத்தைத் தெரிவித்தார்.

## தென்னை மரம் வீழ்ந்ததில் மின்கம்பங்கள் மூன்று அடியோடு முறிந்து வீழ்ந்தன!

### வட்டக்கச்சிப் பகுதியில் பயணம் செய்வோர் அச்சம்

வட்டக்கச்சிப் பகுதியில் பாதுகாப்பில்லாத மின் வழங்கலால் தொடர்ந்தும் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. நேற்றைய தினம் இப்பகுதி வீதியொன்றின் குறுக்காக மின்கம்பிகள் அறுபட்ட நிலையில் மூன்று மின் கம்பங்கள் வீழ்ந்து கிடந்ததைக் காணமுடிந்தது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் தென்னை மரமொன்று மின் கம்பிகளின் மேல் சரிந்து வீழ்ந்ததினால் மின் கம்பிகள் அறுந்துபோயின. அதேவேளை, இச்சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலும் அதற்கு அப்பாலும் இருந்த மூன்று மின் கம்பங்கள் நிலத்தின் அடியோடு முறிந்து வீதிக்கு குறுக்காக வீழ்ந்துள்ளன. இதனால் நேற்றுப் பகல் போக்கு வரத்துக்கு பெரும் இடையூறாகவும் இருந்ததோடு அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்பட்டன.

மின் கம்பங்கள் உக்கிய நிலையில் இருந்தமையே அடியோடு முறிந்து விழக் காரணமென இப்பகுதியிலுள்ளோர் தெரிவித்தனர். ஏற்கனவே, இப்பகுதியில் மின் கம்பமொன்று திடீரென வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர் மீது வீழ்ந்ததில் அவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாம்புக் கடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் மரணம்

(கண்டாவளை)

பிரமந்தனாறு கல்லாறுப் பகுதியில் பாம்புக்கடிக்கு இலக்காகி இளம் குடும்பஸ்தர் மரணமானார். இராசநாயகம் நாகராசா (வயது28) என்ற 3பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

மேற்படி மரணமானவர் வண்ணாங்குளம் பகுதியில் இரும்புத் தொழிலகம் நடாத்திவந்ததாகவும் கடந்த வியாழனன்று இரவு உறக்கத்திலிருந்த சமயம் பாம்பு கடித்ததாகவும் உடனே வாகன வசதி இல்லாமையால் சில மணிநேரம் தாமதித்து கிளி. மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப் பட்டபோதிலும் அங்கு மரணமானார் என்பது தெரியவருகிறது. (14)

## கிளிநொச்சி மாவட்டத்தில் கண் நோயால் பலர் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண் நோய் தற்போது வெகுவாகப் பரவி வருவதாகத் தெரிய வந்துள்ளது. சிறுவர் முதல் பெரியோர் வரை மேற்படி கண்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

கிளி. உருத்திரபுரம்,8ம் வாய்க்கால்ப் பகுதிகளில் மேற்படி கண் நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கரியாலை நாகபடுவானில் கல்விக்கூடம் திறப்பு

### சிறுவர் பூங்காவும் அமைப்பு

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையில் கரியாலை நாகபடுவான் மக்கள் அபிவிருத்தி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மாலை நேரக் கல்விக் கூடம், கலைக்கூடம், சிறுவர் பூங்கா திறப்பு விழா நேற்று முனதினம் முப.11.00 மணிக்கு கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவன வளாகத்தில் இடம் பெற்றது.

ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து கல்விக்கூடத்தினை கடற்புலிகளின் முழங்காவில் பிரதேசப் பொறுப்பாளர் அடல்தேவன் திறந்துவைத்தார். கலைக்கூடத்தினைப் பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் பாலசுப்பிரமணியம் திறந்துவைத்தார்.

சிறுவர் பூங்காவினை கிளி. மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் திறந்துவைத்தார். வரவேற்புரையை வசீகரன் நிகழ்த்தினார். தலைமையுரையை நிறுவனத் தலைவர் சி. சச்சிதானந்தசிவம் நிகழ்த்தினார். சிறப்புரைகளைத் தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இக்கல்வி நிலையத்தில் 129 மாணவர்கள் இலவசமாகக் கல்விகற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிடையே மெய்வல்லுனர் போட்டி!

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் கிளிநொச்சிப் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அன்றையதினம் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்கும், கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்கும் இடையிலான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளி.அரச அதிபர் தி.இராசநாயகமும் சிறப்பு விருந்தினராக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (சோ)

## முள்ளியவளை வைத்தியசாலையில் ஏப்ரலில் 5,523 பேர் சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் 5,523 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின் ஏப்ரல் மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் 3693 நோயாளர்களும், சாதாரண காய்ச்சலினால் 957 பேரும், சிரங்கினால்211 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 73 பேரும், சிறு சத்திர சிகிச்சைக்காக 14 பேரும், வயிற்றோட்டத்தினால் 17 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் சாதாரண காய்ச்சலினால் 73 குழந்தைகளும், சிரங்கு நோயினால் 15 குழந்தைகளும் வயிற்றோட்டத்தினால் 02குழந்தைகளும் சிகிச்சை பெற்றுள்ளதுடன் ஒரு வயது தொடக்கம் 5 வயது வரையானவர்களில் சாதாரண காய்ச்சலினால் 205 சிறார்களும், சிரங்கினால் 203 சிறார்களும், குருதிச்சோகையினால் 23 சிறார்களும் வயிற்றோட்டத்தினால் 04 சிறார்களும் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கும் அவ்வறிக்கை, மேற்படி வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் கடந்த மாதம் மகப்பேற்றுக்காக 42 நிறை மாத கர்பிணித்தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 22 சிசுப் பிறப்புக்கள் நிகழ்ந்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளது. (ஆ)

**சிந்தனைக்கு**



விடுதலைவேண்டி நிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

- தமிழீழத் தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19-05-2003

## புதிய தத்துவம்

"சமாதானப் பேச்சுவார்த்தைகளை எத்தகைய தடைகள் வந்தாலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்". இது சமாதானத்தின் மீது பேரவாக் கொண்ட யாரோ ஒரு மதத் தலைவரினதோ அன்றி மக்கள் நலனில் அக்கறை கொண்டமனித நேயவாதியினதோ கூற்றுக்கள் அல்ல. சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூற்றுக்கள் ஆகும். அண்மையில், சிறிலங்காவிற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்காவின் தென்னாசியாவிற்கான பிரதி வெளிவிவகார இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவுடனான சந்திப்பின்போது அவர் தெரிவித்ததாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு பேசுவதொன்றும் ஆச்சரியத்திற்குரியதொன்றல்லத்தான். ஏனெனில், அவர் இரு துருவங்களையும் ஒன்றாக இணைப்பது போன்று இரண்டு முரண்பாடான அம்சங்களை ஒன்றாக இணைப்பது பற்றிப் பேசுவதிலும் அதற்கென ஒரு கோட்பாட்டையே முன்மாதிரியாகக் காட்டக்கூடியவரும் ஆகும். எடுத்துக்காட்டாக யுத்தத்தின் மூலம் சமாதானம் என்ற புதியதொரு கோட்பாட்டிற்கு வடிவம் கொடுக்க முனைந்து நாட்டிற்கே பேரழிவைத் தேடிக் கொடுத்தவராகும்.

இத்தகையதொரு கோட்பாட்டையே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கைக்கொள்வதாகக் கொள்ளலாம். அதாவது, சனாதிபதியின் சித்தாந்தத்தின்படி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு எதிராக அதன் ஸ்திரத் தன்மையைக் குறைக்கும் வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வேறு, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகள் வேறு என்பதாகும்.

அதாவது, சனாதிபதி சந்திரிகாவின் கோட்பாட்டின்படி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்படாத அளவில் முட்டுக்கட்டையை நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் தோற்றுவிப்பது வேறு. ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளில் ஏற்படக்கூடிய முட்டுக்கட்டைகளைத் தாண்டி சமாதான முயற்சிகளில் வெற்றிபெறுவது வேறு. சந்திரிகா குமாரதுங்கவின் இந்நிலைப்பாட்டை வேறுவிதமாகக் கூறின், ரணில் அரசாங்கத்தினை நாம் கவிழ்க்க முனையலாம். ஆனால், ரணிலின் சமாதான முயற்சிகளில் வெற்றிபெறவேண்டும் என்பதாகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பொறுத்து இன்று அதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலையே. சிறிலங்காவின் அரசியல் யாப்பின் பிரகாரம் சனாதிபதியிடம் உள்ள நிறைவேற்று அதிகாரமும், முப்படைகளின் தளபதி என்ற பதவியும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை அடிப்படையிலேயே பலவீனமாக்குகின்றது. இதனை சனாதிபதி சந்திரிகா அடிக்கடி வெளிக்காட்டியும் வருகின்றார்.

இந்தவகையில், இறுதியாக நடந்த சம்பவமானது, அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி சந்திரிகா தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமை ஆகும். அதாவது, அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் இருந்த பொறுப்பொன்றை உறுதியானதொரு காரணமின்றி சனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டுள்ளார். இது ரணில் அரசாங்கத்திற்கு சனாதிபதி தரப்பில் இருந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளாகவே கொள்ளத்தக்கது.

இதேவேளை, சனாதிபதியின் இந்நடவடிக்கையானது அடுத்த பொதுத் தேர்தல் ஒன்றைச் சிந்திக்கும் அளவிற்கு ஆளும் கட்சிகளைக் கொண்டு சென்றுள்ளது. இதனால் தேர்தலுக்கான முன்னேற்பாடுகளையும் அது மேற்கொள்ளும் அளவிற்கு கொண்டு சென்றுள்ளது. இது தவறான / தேவையற்றதொரு நடவடிக்கை என்றும் நிராகரித்துவிட முடியாது. ஏனெனில், ஐ.தே. முன்னணி அரசாங்கத்தை விரைவில் சனாதிபதி சந்திரிகா கலைத்து விடுவார் எனப் பொ.ஐ. முன்னணியினர் வெளிப்படையாகவே பேசி வருகின்றனர்.

இந்த வகையில் தமது அரசாங்கத்தின் எதிர்காலமே கேள்விக்குள்ளாகியுள்ள நிலையில் நெருக்கடிக்குள்ளாகியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளில் தீவிர கவனமும், அக்கறையையும் செலுத்துவதென்பது எத்தனை தூரம் சாத்தியமானதொன்றாகும். அவ்வாறு செலுத்தினும் கூட பலவீனமான நிலையில் உள்ள அரசாங்கத்தினால் எதனைச் சாதித்து விடத்தான் முடியுமா?

எடுத்துக்காட்டாக, இன்று சமாதான முயற்சிகளுக்குத் தோன்றியுள்ள முட்டுக்கட்டைகளில் ஒன்று உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விவகாரமாகும். இதில், அரசாங்கத் தரப்பு மேற்கொள்ளும் முன்னேற்றகரமான நடவடிக்கையே, சமாதானப் பேச்சுவார்த்தைகளும் வெற்றி அடைய அடிப்படையாக அமையக்கூடியது. ஆனால், சனாதிபதி சந்திரிகா முப்படைகளின் தளபதி என்ற ரீதியிலோ அன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற ரீதியிலோ இதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளாரா?

சனாதிபதி சந்திரிகா முரண்பாடாகப் பேசுவது மட்டுமல்ல, நடைமுறையில் சாத்தியமற்றவற்றையும் பேசுவதுண்டு. இவரின் பொ.ஐ. முன்னணி அரசாங்கம் தோல்வி அடைய வேண்டி வந்தமையும் இத்தகைய முரண்பாடான தத்துவங்கள் காரணமாகவுமே ஆகும். ஆனால், தற்பொழுதும் அதனை அவர் கைவிட்டதாக இல்லை. அவ்வாறு இல்லாதுவிடில், நான் ஆட்சியைக் கவிழ்த்தாலும் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டும் என்ற ரீதியில் அவர் பேசியிருக்கமாட்டார். அதாவது, சந்திரிகாவின் இப்பேச்சானது மரத்தைத் தறித்து வீழ்த்தினும் அது பழம் தர வேண்டும் என்பதுபோல் உள்ளது.

# 10 வருடங்களில் இல்லாத பெருமழை;

# 35000 தென் பகுதி மக்கள் வீழிழப்பு!

(கொழும்பு)

பத்து வருட காலத்தில் இடம் பெறாத மழையும் பெரு வெள்ளமும் கடந்த சில நாட்களில் தென்னிலங்கையில் இடம்பெற்றுள்ளது. இதனால், பல மாவட்டங்களில் 35000 மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இரத்தினபுரியில் மாத்திரம் பத்தாயிரம் பேர் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர். இரத்தினபுரியில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடும்மழையால் நகர் நீரில் மூழ்கியுள்ளது.

மழை தொடர்ந்து பெய்து வருவதினால் நிலைமை உடனடியாகச் சீரடையமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருவெள்ளம் காரணமாக 2000 வீடுகள் சேதமடைந்துள்ளன. 20,000 மக்கள் பொது இடங்களில் தங்கியுள்ளனர். தொடர்ந்து பெய்து வரும் மழையினால் களுகங்கை, வளவை கங்கை உட்பட சகல நதிகளிலும் நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன் இம் மாவட்டத்தில் உள்ள பல வீதிகளில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் களுத்துறை மாவட்டமும் வெள்ள அபாயத்துக்குட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் கடற்படைப் படகுகளை அனுப்பி வைத்துள்ளதுடன் அவசரகால நிலையை எதிர்கொள்வதற்கும் படையினர் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அபிவிருத்தி லொத்தர் சபை பிரச்சினைக்கு கலந்துரையாடல் அன்றேல் நீதிமன்றில் தீர்வு!

### -அரசியல் யாப்பு நிபுணர்கள் ஆலோசனை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை சம்பந்தமாக சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பிரச்சினைக்கு கலந்துரையாடல் மூலம் அல்லது நீதிமன்றத் தீர்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்று அரசியல்யாப்பு நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சிரேஷ்ட சட்டநிபுணரான கேசி வெலியமுன கருத்துத் தெரிவிக்கையில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசியல் யாப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குப் பதிலாக பாரம்பரிய வழிமுறைக்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த வகையில் கடந்த ஒன்றரை வருடகாலமாக நிறைவேற்று அதிகாரத்துக்கும் சட்டவாக்கு அதிகாரத்துக்கும் இருந்து வந்த பாரம்பரிய உறவுகள் நல்லதொரு உதாரணமாக அமையும் என்று குறிப்பிட்டார்.

அதேசமயம் அமைச்சுக்களை சனாதிபதி மாற்றம் செய்யும் போது பிரதமரின் கருத்துக்களும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது முக்கிய அம்சம்.

இலங்கையின் அரசியல் யாப்பின் 44 பிரிவுக்கு விளக்கம் கோரும் வகையில் இதுவரை எத்தகைய சம்பவங்களும் இடம்பெறவில்லை. சனாதிபதியால் அல்லது பிரதமரால் சட்ட அடிப்படையிலான வழிகாட்டல் கோரப்படும் பொழுது சட்டமா அதிபர்திணைக்களம் அத்தகைய வழிகாட்டல்களை அளிக்க வேண்டும். சட்டத்திற்கு விளக்கம் அளிக்கும் கடப்பாடு நீதிமன்றத்திற்கே உண்டு என்று வெலியமுன குறிப்பிட்டார். அரசியல் யாப்பு விவகாரங்கள் சம்பந்தமாக உயர் நீதிமன்ற கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் சனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# குறுகிய அரசியல் இலாபத்திற்காக செயற்படுதல் நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும்!

### -அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன

(கொழும்பு)

குறுகிய அரசியல் இலாபம் கருதி நாட்டைப் பிளவுபடுத்த எவ்வாறாயினும் முயற்சித்தால் அது நாட்டிற்குச் செய்யும் துரோகமாக அமையும் என புனர்வாழ்வு மீள் குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித் துள்ளார். புலிகள் பங்குபற்றாது விட்டாலும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டை திட்டமிட்டவாறு ஜப்பானில் நடாத்த வேண்டுமென பொ.ஐ.முன்னணியின் தேசிய அமைப்பாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ள கருத்துக்களுக்குப் பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சமரவீர குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயல்வதாகும். இது தனக்குக் கவலையளிப்பதாகவும் கூறியுள்ளார். தேசிய பிரச்சினைக்கு அரசியல்த் தீர்வொன்றைக் காணவேண்டுமானால் விடுதலைப்புலிகளும், அரசும் ஜப்பான் மாநாட்டில் பங்குபற்ற வேண்டுமென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# மேற்கிந்திய தீவுடனான 1-வது போட்டியில் அவுஸ்திரேலியா 2 ஓட்டங்களால் வெற்றி!

அவுஸ்திரேலிய மேற்கிந்தியதீவு அணிகளுக்கிடையில் கிங்ஸ்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா மழை காரணமாக டக்வேக்லூயிஸ் விதிப்படி இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரிக்கிபொண்டிங் 59 ஓட்டங்களையும் லீமன் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

37 ஓவர்களில் வெற்றி இலக்கான 208 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆடுகளம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 37 ஓவர் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது.


இதில் சர்வான் 47 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது பெற்றார். பந்து வீச்சில் காலி 37 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

# சிறிலங்கா அணிக்கு வெற்றி

பாகிஸ்தான் சிறிலங்கா அணிகளுக்கிடையில் நேற்று தம்புள்ளையில் நடைபெற்ற பரபரப்பான மும்முனைக் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்தில் சிறிலங்கா அணி 12 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் டில்சான் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கிய பாகிஸ்தான் 48.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக மாலிக் 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் 23 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அவரே சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்.




# கென்ய கிரிக்கெட் அணி வரிவிலக்கு கோருகிறது

அண்மையில் நடந்துமுடிந்த உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் போது அரையிறுதி வரை முன்னேறிய கென்ய கிரிக்கெட் அணி அதற்காக வழங்கப்பட்ட பெருந்தொகை பரிசுக்கான பணத்துக்கு வரியறவிடுவதிலிருந்து விலக்களிக்குமாறு கோரியுள்ளது. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற சிறிலங்கா, பங்களாதேஷ் சிம்பாவ்வே, ஆகிய நாடுகளை வெற்றியீட்டியதன் மூலம் அவ்வணிக்கு 530ஆயிரம் அ.மெ. டொலர் பரிசாகக் கிடைத்தமை தெரிந்ததே.

இது தொடர்பாக அணித்தலைவர் தெரிவிப்பதானது, தமது சபை வழங்கும் பணத்துக்கும் வரி வழங்குவதாகவும் இந்தப் பணத்துக்கு வரிவிலக்களிக்குமாறும் கேட்கும் அவர் தமது கிரிக்கெட் சபை இது தொடர்பில் கவனம் எடுக்காமை கவலையளிப்பதாகவும் கூறியிருக்கிறார்.

# ஐயங்கன் குளக்கிராமத்தில் இயங்கும் திலீபன் மருத்துவமனை ஆண்டுவிழா

மல்லாவிப் பிரதேசத்தில் ஐயங்கன்குளம் கிராமத்தில் இயங்கிவரும் தியாகி திலீபன் மருத்துவ மனையின் ஓராம் ஆண்டு நிறைவுவிழா நேற்று மாலை 4மணிக்கு ஐயங்கன் குளம் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக்குழுத் தலைவர்புண்ணியமூர்த்தி தலைமையில் ஆரம்பமானது.

இதில் பொதுச்சுடரினை தியாகி திலீபன் மருத்துவமனையின் பொறுப்பாளர் ஈழச் செல்வன் ஏற்றினார்.

தேசியக்கொடியினை முல்லைத் தீவு மாவட்ட மகளீர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி தமிழ்நிலவு ஏற்றினார். லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

பின்னர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந் நிகழ்வின் உரையினை தியாகி திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் ஈழச்செல்வன், தே.எ. பேரவைச்செயலாளர் அமுதலிங்கம், துணுக்காய் கிராமசேவையர்ளர், முல்லைத்தீவு மாவட்ட மகளீர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆற்றி னார். இந் நிகழ்வில் கிராம் மக்கள் சார்பாக வைத்தியசாலை வைத்தியருக்கும் அவருடன் பணிபுரியும் உதவியாளருக்கும் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தொடர்ந்து இரவு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் தமிழீழ தேசியத்தலைவரை பாராட்டியும், மருத்துவ சேவை பிரிவுப் போராளிகளைப் பாராட்டியும் மருத்துவ மனை அபிவிருத்திக் குழு செய்திக் குறிப்பொன்றினை வெளியிட்டு வைத்துள்ளது.

# திறமையான விவசாயக் குழுக்களுக்கு அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் திறமையாக விவசாயச் செய்கையில் ஈடுபடும் விவசாய குழுக்களுக்கு விவசாயக் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

திறமையாக விவசாயத்தில் ஈடுபடும் குழுக்கள் என இனங் காணப்பட்ட குழுக்களுக்கு தலா ஒரு நீர் இறைக்கும் இயந்திரமும் மருந்து தெளிகருவியும் வழங்கப் படவுள்ளன.

இப் பொருட்கள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இந் நடவடிக்கை மூலம் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதுடன் விவசாயச் செய்கையையும் அதிகரிக்கமுடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. (லோ)

# கிளி. மாவட்டத்தில் பெண்களுக்கு பனைசார் கைப்பணிப்பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

நாட்டில் நலிவடைந்து வரும் பனம்பொருள் உற்பத்தியை மீண்டும் கட்டி எழுப்பும் வகையில் பனை அபிவிருத்திச் சபையால் பெண்களுக்கான பனை சார் கைப்பணிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சிநெறிக்கு பூநகரி, ஆலங்கேணி, நல்லூர், புலோப்பளை, புதுமுறிப்பு, கரைச்சி ஆகிய பகுதிகளில் இருந்து 60க்கும் மேற்பட்ட பெண்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்ளப்படும் பயிற்சி ஆறுமாத காலம் வரை நடைபெறும். பயிற்சியின் பின்னர் பனம் பொருள் உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கப்படும்.

இவ்வாறு கல்வி கற்கும் மாணவர்களுக்கு மாதம் 500 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இத்திட்டத்திற்காக கிளிநொச்சி அரச செயலகத்தால் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

# ஜெருசலேமில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் 8 பேர் பலி; 20க்கும் மேற்பட்டோர் காயம்!

(ஜெருசலேம்)

ஜெருசலேமில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் எட்டுப்பேர் பலியாகியுள்ளனர்.

ஜெருசலேமின் வடக்குப்பகுதியில் பேருந்து ஒன்றில் நேற்றுக்காலை இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஜெருசலேம் நகரின் மிகப்பெரிய பாலத்தின் அருகே இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பின்னர் இஸ்ரேலிய - பலஸ்தீன பிரதமர்கள் பேச்சுவார்த்தை நடத்தி முடிவடைந்த சில மணிநேரத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் 6 பாடசாலைகள் மூடப்படும் நிலை

## போராட மாணவர்கள் முடிவு

தென்மராட்சியில் சிறிலங்கா படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆறு பாடசாலைகள் மூடப்படும் அவல நிலை எதிர்கொள்ளப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாள் சிறிகணேசா வித்தியாலயம், கொட்டுவெளி அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை, கரம்பகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை,தனங்கிளப்பு அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை, மறவன் புலோ சகல கலாவல்லி வித்தியாலயம், எழுதுமட்டுவாள் வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய ஆறு பாடசாலைகளுமே இவ்வாறு மூடப்படவுள்ளன.

இந்த ஆறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வி சாரா ஊழியர்கள் தற்போது தற்காலிகமாக கடமையாற்றும் பாடசாலைகளில் இணைக்கப் படவுள்ளனர்.

இதேவேளை மக்கள் மீளக்குடியமர முடியாத பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மூடுவதை ஆட்சேபித்து குறித்த பாடசாலைமாணவர்களும் , பெற்றோரும் தென்மராட்சி கல்வி வலயம் முன்பாகமறியல் போராட்டத்தில்ஈடுபடவுள்ளனர்.

## - பிலிப்பைன்சில் -

# இஸ்லாமியப் போராளிகள் மீது இராணுவம் வான் தாக்குதல்

பிலிப்பைன்சின் தென்பகுதித் தீவான மின்டாளோடு மொறோ இஸ்லாமியவிடுதலைமுன்னணிப் போராளிகள் மீது தாங்கள் நடத்தியுள்ள தாக்குதலில் சுமார் 50 போராளிகள் கொல்லப் பட்டுள்ளார்கள் என பிலிப்பைன்ஸ் இராணுவம் கூறியுள்ளது.

இப்போராட்டப் பிரிவினரின் இரண்டு நிலைகள் மீது பிலிப்பைன்ஸ் படைகள் சனிக்கிழமையிலிருந்து வான் குண்டு வீச்சுகளையும், எறிகணைத் தாக்குதல்களையும் நடாத்தி வருவதாகத் தெரியவருகின்றது.

# முக்கிய கலந்துரையாடல்

(மன்னார்)

சமகாலவிடயங்களை உள்ளடக்கிய கலந்துரையாடல் ஒன்று மன்னாரில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. அமிர்தாப் தலைமையில் குஞ்சுக்குளம் பாடசாலையில் இம்பெற்றது.

இதில் அப்பிரதேச மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர். (மி)

# நோய்த் தடுப்பு நடவடிக்கைக்கு மேலதிக நிதி ஒதுக்க வேண்டும்

## - மத்திய வங்கி அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

மருத்துவத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. நோயைக் குணப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு அடுத்த கட்டமாகவே நிதி ஒதுக்கீட்டை வழங்க வேண்டும்.

டெங்குக் காய்ச்சல், மலேரியா என்பவற்றின் அச்சுறுத்தல் கரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் சுகாதார சேவைகள் பல வழிகளில் பின்னடைவு கண்டுள்ளன. மூலவளங்கள் இல்லாமை முக்கிய பிரச்சினை ஆகும்.சுகாதார துறைக்கான செலவீனத்தின் பெரும் பகுதியை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ள அதே சமயத்தில் நோய்களைக் குணப்படுத்தும் நடவடிக்கையில் தனியார் துறை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் நோய் தடுப்பு நடவடிக்கைக்கும் தனியார் துறை பங்களிப்பு செய்யவேண்டியது அவசியமாகும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய்வானில் 3பேர் மரணம்

தாய்வான் நாட்டில் 3பேர் சார்ஸ் நோயினால் இறந்துள்ளனர். நேற்று முன்தினம் 26பேருக்கு சார்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அமெரிக்கா தனது இராணுவத்தினரை தாய்வான் செல்ல தடைவிதித்துள்ளது.

இதற்கிடையே சார்ஸ் நோய் ஏற்பட்டுள்ள இடங்களில் இருந்து வருவோரை பரிசோதனை செய்து தீவிரமான தடுப்பு நடவடிக்கை எடுப்பது குறித்து உலக சுகாதார நிறுவனம் ஆலோசனை வழங்கியுள்ளது.

## -உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு-

# நிலுவைத்தொகையைச் செலுத்த கூட்டுறவுச்சங்கங்களுக்குப் பணிப்பு

யாழ். குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உணவுக்கட்டுப்பாட்டு திணைக்களத்துக்கு செலுத்த வேண்டிய பலகோடி ரூபா நிலுவைத் தொகையை உடனடியாகச் செலுத்துமாறு யாழ். அரச அதிபர் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடபகுதியில் உள்ள 23 கூட்டுறவு சங்கங்களுக்கும் அத்தியாவசிய பொருட்களை 1990 ஆம் ஆண்டுவரை உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களம்கடன் அடிப்படையில் வழங்கிவந்தது.

பொருட்களை விற்பனை செய்த பின்னர் இந்த கூட்டுறவு சங்கங்கள் பணத்தைதிருப்பிச் செலுத்திவந்தன.

இராணுவ நடவடிக்கை காரணமாகவும் அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வுகள்காரணமாகவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாரிய நட்டம் ஏற்பட்டது. நிலைமை எவ்வாறு இருப்பினும் இந்த நிதியினை செலுத்துமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கான பாக். தூதுவர் யாரென்பது முடிவாகவில்லை

## பாக். வெளியுறவு அமைச்சகம் அறிவிப்பு

இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகரை நியமிக்கும் விடயத்தில் இறுதிமுடிவு இன்னமும் எடுக்கப் படவில்லை என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் நேரப்படி நேற்று அதிகாலை 2மணிக்கு அந்நாட்டு அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான எ.பி.சி. மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது சீனாவில் பாகிஸ்தான் தூதராகவுள்ள ரியால்ட் முகமட்கான் இந்தியாவுக்கான புதிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று பாகிஸ்தான் பிரதமர் அறிவித்ததாக பாகிஸ்தான் அதிகாரபூர்வ தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

ஆனால் பிரதமர் கூறியது தவறாக மேற்கோள்காட்டப்பட்டு விட்டதாக நேற்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்

# ஜப்பான்....

பினர் விளக்கவுள்ளனர்.

அத்துடன் இருதரப்பினருக்கும் இடையில் ஒரு சுமுக நிலைமை தோன்றும் வரை டோக்கியோவில் நடைபெற இருக்கின்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை பிற்போடுமாறும் ஜப்பானிய தூதுவர் உட்பட ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்களிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

# அரசுக்கெதிரான 3 பத்திரிகைகள் பெரும் நிதி நெருக்கடியில்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் மூன்று தென்னிலங்கைப் பத்திரிகைகள் பெரும் நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலாபமின்றி இப்பத்திரிகைகள் தற்போது இயங்கி வருகின்றன. இவற்றுக்கு நிதி உதவி வழங்குவதற்கு உறுதியளித்தோர் விரைவில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்ததும் நிதி உதவி கிடைக்குமென வாக்குறுதி வழங்கியிருந்தனர்.ஆனால்அவ்வாறு நடைபெறாமையால் இன்னமும் அப்பத்திரிகைகளுக்கு உதவி எதுவும் கிடைக்கவில்லை. இதனால் அவை நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# உதவி வைத்திய அதிகாரிகள் வேலைநிறுத்தம் செய்யமுடிவு

மத்தியமாகாண சுகாதார அமைச்சு முன்நடத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையின் போது உதவி வைத்திய அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது துரித நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் நாடுதழுவிய வேலை நிறுத்தத்தில் குதிக்கப்போவதாக உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்து உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத்தலைவர் தெரிவிக்கையில் கண்டிப்பொலிசார் தாக்குதல் நடத்தியோர் மீது எதுவித விசாரணையும் நடத்தவில்லை எனத் தெரிவித்தார்.

# படையின....

வழங்குமாறு அவர் கோரியுள்ளார்.

மேலும் 1995 சனவரி முதலாம் திகதி முதல் சிறிலங்காவுக்கு ஆயுத விநியோகம் செய்து வந்த வெளிநாட்டு உள்நாட்டு முகவர்களின் முழு விபரங்களையும் அவர் கேட்டுள்ளார்

இவைகுறித்த விபரங்களை அப்போது யுத்தத்தை நடத்திய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லது முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தவிடம் கேட்டிருக்க வேண்டும் என அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

# பெரும்.....

வெள்ளப்பெருக்கா கும்.இரத்தினபுரி யில் வெள்ளப் பெருக்குடன் மண்சரிவுகளும் ஏற்பட்டு இதில் 28பேர் உயிரிழந்துள்ளதுடன்,17பேரின் சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. 48 பேர் காணாமல் போயுள்ளனர். இங்கு 15 கிராமசேவகர் பிரிவுகளில் சகல வீதிகளும் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை 300கிராமங்கள் வரையில் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளதாகவும், இதில் 100 கிராமங்கள் வரையில் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவில் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை ரணில் தலைமையிலான அமைச்சர்கள்குழு நேரடி யாகச்சென்று பார்வையிட்டுள்ளது.

கரு ஜெயசூரிய கிற்றி சமரவீர, திலக் மாரப்பன ஆகியோர் பிரதமருடன் நேரடியாகச்சென்று பாதிக்கப்பட்ட இடங்களையும், அங்கு மேற்கொள்ளப்படுகின்றன. நிவாரண உதவிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

# அமெரி....

சேர்ந்த பதின்மூவாயிரம் படையினர் இந்த நடவடிக்கையில் பங்கு பற்றுகின்றார்கள்.கடல், தரை, வான் படைகள் என்றுமுப்படைகளும் கலந்து கொள்ளும் இந்த மிகப் பெரிய ஒத்திகை யைப் பார்வையிடுவதற்கு சிறிலங்கா, இந்தியா உட்படபதினொரு நாட்டுப்படையதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.